Registered as a newspaper

விலை - ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 16 + ii

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை - 10 | 26-11-2003 | புதன்கிழமை | ஓசை 281




- தமிழர் தாயகம் எங்கும் எழுச்சிக்கோலம்-

# மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள் நேற்றுக்காலை உணர்வுபூர்வ ஆரம்பம்!

## பெரும் எண்ணிக்கைகளில் மக்கள் பங்கேற்பு

**தமிழீழ மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகப் பகுதியெங்கும் உணர்வுபூர்வமாக ஆரம்பமாகின. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியுட்பட அனைத்துப் பிரதேசங்களிலும் காலை எட்டு மணிக்கு தேசியக்கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. அனைத்து மாவீரர் துயிலுமில்லங்கள், போராளிகளின் தளங்கள், இயக்கநிறுவனங்கள், பொது நிறுவனங்கள், பாடசாலைகள் என்பவற்றில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் தமிழ் மக்கள்,போராளிகள் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.**

மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள் நேற்றுக்காலை ஆரம்பிப்பதற்கு முன்பாக உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் முன்னேற்பாடுகள் மக்களினாலும், போராளிகளினாலும் தமிழர் தாயகம் எங்கும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வீதிகள், பொது நிறுவனங்கள், இயக்க நிறுவனங்கள், பாசறைகள், வர்த்தக நிலையங்கள் என்பன சிவப்பு,மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. முக்கிய இடங்களில் அலங்கார வளைவுகள் கட்டப்பட்டு மின் ஒளி அலங்காரங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ் வளைவுகளில் போராட்ட வரலாறு, மாவீரர் ஈகம் என்பனவற்றைச் சித்திரிக்கும் காட்சிகள் தீட்டப்பட்டுள்ளன. வீதிகளுக்கு குறுக்கே மாவீரர் புகழ்கூறும் வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளும் மாவீரர்நாளை பறைசாற்றும் பதாகைகளும் கட்டப்பட்டிருந்தன.

முக்கியமான இடங்களில் விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு, அவற்றிலே மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டன.

இந்நிலையில் நேற்றுக்காலை 8.00 மணிக்கு தேசியக்கொடி ஏற்றலுடன் மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் ஆரம்ப (15ம் பக்கம் பார்க்க)

# படைத்தரப்பு வாக்குறுதிகளுக்கு ஏற்ப நடந்து கொள்வதாக இல்லை

## யாழ்.இல் நேற்றைய சந்திப்பில் புலிகள் குற்றச்சாட்டு

மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்பமாட்டோமென படைத் தரப்பு முன்னரும் உறுதி மொழிகளைத் தந்திருந்தபோதும், அவ்வாறு இதுவரை செயற்பட்டிருக்கவில்லையென குற்றஞ்சாட்டியுள்ளார் யாழ். மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன்.

மாவீரர் தின நிகழ்வுகளின் போது படைத்தரப்பின் தலையீடுகள் தொடர்பாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தில்சந்திப்பு ஒன்று நேற்றுக்காலை இடம்பெற்றது.

காலை 10.00மணிக்கு ஆரம்பமாகி இரண்டு மணி நேரத்திற்கு மேலாக நீடித்த இப் பேச்சுக்களில் படைத்தரப்பின் சார்பில் யாழ். மாவட்ட படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, பிரதிக் கட்டளை அதிகாரி இரட்ண சபாபதி மற்றும் படை உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பொலிஸ் தரப்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலதுங்க மற்றும் பொலிஸ் தலைமையக அதிகாரி ஆனந்த செனிவிரட்ண ஆகியோரும் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி J.ஜஸ்பர் உம் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் சார்பில் யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் தலைமையிலான அரசியல்துறைப் போராளிகள் கலந்துகொண்டனர்.

நல்லூர் கோவில் வீதியிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட பிரதேசக் கண்காணிப்பாளர் கரினா எரிக்சனும் பிரசன்னமாகியிருந்தார்.

சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்கள் கேள்விகளுக்குப் பதிலளித்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, மாவீரர் தின நிகழ்வுகளின் போது எந்தவிதமான பிரச்சனைகளிலும் படைத்தரப்பு ஈடுபடமாட்டாதெனத் தெரிவித்ததுடன், பிரச்சனைகள் ஏற்படுவதில் எவருக்குமே விருப்பமில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது இரு

(15ம் பக்கம் பார்க்க)

## தேசிய வடிவே! வாழிய நூறாண்டு

விடியலின் வடிவே; எங்கள்
வீரியக் கொடியே; வீரக்
குடியதின் முடியே; ஈழக்
கொற்றவை முரசே; யாரும்
அடிமுடி அறிய வொண்ணா
ஆளுமை நிமிர்வே; வெற்றிப்
படிகளில் நடவாய் இன்னும்
பன்னெடுங் காலம் வாழ்வாய்.

பாசமாய் தாய்யென் றானாய்
பகையெனில் வாளென் றானாய்
தேசமே கனவென் றானாய்
தேசிய வடிவென் றானாய்
வீசிடும் காற்றென் றானாய்
விடுதலைக் கனலென் றானாய்
வாசமாய்; வடிவாய் நூறு
வயதிலும் வாழ்வாய் ஐயா.

..............புதுவை இரத்தினதுரை



# தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமான மாவீரர் எழுச்சிநாள்

# பல்லாயிரக்கணக்கில் மக்கள் மாவீரருக்கு மலர்தூவி அஞ்சலி

தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் நேற்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகியுள்ளது. ஆயிரக் கணக்கான பொதுமக்களும், போராளிகளும் இந் நிகழ்வுகளில் பங்குபற்றினர். அத்துடன் பல்வேறு இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் உருவப்படம் வைக்கப்பட்ட பந்தல்களுக்குச் சென்ற பொதுமக்கள் மாவீரர்களுக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தினர். அத்துடன் மாவீரர் தின



தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் மாவீரர் களுக்கு சுடரேற்றி வீரவணக்கம் செலுத்துகிறார்.

அலங்காரங்களைப் பெருமளவான மக்கள் பார்வையிட்டுக் கொண்டிருந்தமையைக் காணக் கூடியதாக இருந்தது.

கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவுப் பந்தலில் எல்லைப் படை மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியிலுள்ள அரசியல் துறை நடுவப்பணியகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற நிகழ்வில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் பொது ஈகச் சுடரினை திலீபன் நடமாடும் மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் வைத்தியர் தேவா ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை வட போர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றி வைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நேற்று மேன்முறையீட்டு நீதியாளர் சுசிதரன் தலைமையில் மாவீரர் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்றன.

பொது ஈகச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஏற்றிவைத்தார். அகவணக்கம், உறுதியுரை, மலரஞ்சலியினைத் தொடர்ந்து, சிறப்புரையினை தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

முழங்காவில் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் செயற்பாட்டு உறுப்பினர் குவேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் மன்னார் மாவட்டத் தளபதி லக்ஸ்மன் ஏற்றிவைத்தார். துணுக்காய் மாவீரர் துயிலுமில்லத்தில் நடைபெற்ற நிகழ்வில், தேசியக் கொடியினை மாலதி படையணியைச் சேர்ந்த தளபதி யமுனா ஏற்றிவைத்தார்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பிரதேச அரசியல் துறையினரும் இம்ரான் பாண்டியன் படையணியினரும் இணைந்து ஒழுங்கு செய்த நிகழ்வில், தேசியக் கொடியினை விசேட படையணியின் சிறப்புத் தளபதி கேணல் சொர்ணம் அவர்கள் ஏற்றிவைத்தார். புதுக்குடியிருப்பிலுள்ள திருமலைத் தொடர்பகத்தில் நடைபெற்ற நிகழ்வில் தேசியக் கொடியினை ராஜேஸ் அவர்கள் ஏற்றிவைத்தார்.

பளை களமுனையில் நேற்று களமுனைப் போராளிகளால் நடத்தப்பட்ட நிகழ்வில் விடுதலைப்புலிகளின் பயிற்சி ஆசிரியர் தினேஷ் மாஸ்ரர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் வவுனியா மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் செல்வராஜா தேசியக் கொடியினை ஏற்றிவைத்து நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். வவுனியா மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் இளந்தென்றல் ஏற்றிவைத்தார். புதுக்குளம் அரசியல் துறைச் செயலகத்தில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அழகரசன் தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். கோயிற்குளம் பிரதேசத்தில் நடைபெற்ற மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ஜீவன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். செட்டிகுளம் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இசைச்செல்வன் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்.(10,சோ,26,24)

# சர்வதேசத்தின் எதிர்பார்க்கை குறித்து பிரபாகரனுடன் பேசவுள்ளேன்!

## ஐரோ.ஒன்றிய வெளிவிவகார ஆணையாளர்

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சர்வதேசம் எதிர்பார்ப்பவை தொடர்பில் அந்தஅமைப்பின்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பெட்டன் தெரிவித்தார். கொழும்பு சர்வதேச ஒத்துழைப்பு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர்,

சனநாயகம் மற்றும் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட்ட நிலையில் சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றே இலங்கையின் இனப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும். 1984ஆம் ஆண்டில் இருந்து 1996ஆம் ஆண்டு காலப்பகுதி வரை இலங்கையின் தலா வருமானத்தில் நூற்றுக்கு 2.5 வீதம் யுத்தத்துக்காக செலவிடப்பட்டுள்ளது. இந்த செலவு மீதப்படுத்தப்பட்டிருந்தால், இலங்கை இன்று மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்று ஆசியாவில் பொருளாதார வளம் மிக்க நாடாகி இருந்திருக்கும். இந்த நிலையில் நோர்வே மத்தியஸ்தத்தில் சமாதான முனைப்புக்கள் உரிய முறையில் கொண்டு செல்லப்பட வேண்டும் என கிறிஸ் பெட்டன் தெரிவித்தார். இந்த நிகழ்வு நடைபெறும் முன்னர் கிறிஸ் பெட்டன் சனாதிபதியைச் சந்தித்துப் பேசினார். இதன்போது இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு முன்னெடுப்புகள் குறித்து இருவரும் விரிவாகக் கலந்துரையாடினர். இன்று வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவருடன் நடக்கவிருக்கும் பேச்சுக்கள் குறித்தும் கிறிஸ்பெட்டன் சனாதிபதிக்குவிளக்கமளித்தார். இன்று நாட்டில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி குறித்து சனாதிபதி கிறிஸ்பெட்டனுக்கு விளக்கமளித்தார். இதன்பின்னர் பகல் போசனத்தின் போது தெரிவு செய்யப்பட்ட சில அரசியல் தலைவர்களை அவர் சந்தித்தார். எனினும் இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் எவரும் பங்கேற்கவில்லை. இதன் பின்னர் கிறிஸ் பெட்டன் முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமையும், அமைச்சர் ஜீ.எல்.பீரிசையும் தனித் தனியாகச் சந்தித்தார். நேற்றுஇரவு 10.00 மணிக்கு இராப்போசன விருந்துடன் அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் பேச்சு நடத்தினார். இன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரைச் சந்திக்கும் அவர், கொழும்பில் பிரதம மந்திரிகளையும் சந்தித்துப்பேச விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

## வீரவணக்கம்

முல்லை மாவட்டத்தில் கடந்த 24ஆம் திகதி கிணற்றில் வீழ்ந்து நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

வடிவேல் நிமலநாதன் (வாழைச்சேனை, மட்டக்களப்பு) த.மு. தர்மன் கேணி, பளை, என் பவரே சாவடைந்தவராவார். இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் மாவீரர் எழுச்சி நாள் சிறப்பு நிகழ்வு

தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் சிறப்பு நிகழ்ச்சி நேற்று மாலை வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகா வித்தியாலய மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

மாலை 5.30 மணியளவில் வடமராட்சிக் கிழக்கு கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதில் முதல் நிகழ்வாக வேம்படிச் சந்தியில் இருந்து கடற்புலிப் போராளிகளின் அணிவகுப்பு ஆரம்பமாகி ஆழியவளை மாவீரர் துயிலுமில்லத்தின் முன்பாக நிகழ்வு நடைபெற்ற மைதானத்தை வந்தடைந்ததையடுத்து வடபோர்முனைக் கட்டளை பணியகத்தைச் சேர்ந்த தளபதி லெப்.கேணல் அறிவு பொதுச் சுடரை ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் தளபதி லெப்.கேணல் மங்களேஸ் ஏற்றிவைத்தார். அடுத்து மாவீரர்களை நினைவுகூரும் வகையில் வைக்கப்பட்டிருந்த படத்திற்கான சுடரினை வட போர்முனை வழங்கல் பகுதிப் பொறுப்பாளர் சுலோசன் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

அடுத்து கடற்புலி போராளிகளால் இதுவரை காலமும் வீரச்சாவடைந்த மாவீரர்களின் ஈகத்தை சித்தரிக்கும் வகையிலும், சமகால நிகழ்வுகளை சுடுத்துக்காட்டும் வகையிலமைந்த கரகம் இடம்பெற்றது. தொடர்ந்து சிறப்புரைகளை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, உடுத்துறை மகாவித்தியாலய அதிபர் ஆழியகுமார் உட்பட பலர் ஆற்றினர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. இந் நிகழ்வுகளில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளைகாலை பெற்றோர் கௌரவிப்பில் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல்சூசை, தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் உட்பட பலர் கலந்துசிறப்பித்துள்ளனர். (லோ,11)

# திருமலையில் கைக் குண்டுவீச்சு

திருகோணமலை மூதூர்வீதிப் பகுதியில் நேற்று இரவு கைக் குண்டு ஒன்று வீசப்பட்டதன் விளைவாக ஏழுபேர் காயமடைந்துள்ளனர். முச்சக்கர வண்டி ஒன்றில் சென்றோரே இந்த கைக்குண்டினை வீசி விட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது. கைக்குண்டு வீசப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதியால் சென்ற பொதுமக்கள் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

# மாவீரர் நாள் நவம்பர்-27

**தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத் தனத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான்; அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக் கொண்டிருந்த தமிழ் தேசம் விழித்துக் கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.**

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன்அவர்கள்.**

# ஈராக்கில் சுயாட்சியை நிர்ணயிக்கும் கால எல்லை ஐ.நா.வில் சமர்ப்பிப்பு

## 2005ல் புதிய அரசு பதவியேற்கும்

**ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பை முடிவிற்குக் கொண்டு வந்து அங்கு சுயாட்சியை நிலைநிறுத்தும் கால அட்டவணையை அந்த நாட்டின் பிராந்திய அதிகார சபை சமர்ப்பித்துள்ளது.**

ஐ.நா. சபையிடம் இக்கால அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.இவ் அட்டவணை எதிர் வரும் டிசம்பர் 15ஆம் திகதி கேட்கப்பட்ட போதிலும் அதற்கு மூன்று வாரத்திற்கு முன்னரே அது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 2004ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ஈராக்கில் சுயாட்சி நிறுவப்படும். அத்துடன் 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் நாட்டில் சுய அரசியல் அமைப்பு தயாரிக்கப்பட்டு அது வாக்கெடுப்பிற்கு விடப்படுமென அவ் அட்டவணையில் கூறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் படி 2005ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஈராக்கில் புதிய அரசாங்கம் பதவிக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




அண்மையில் வங்கக் கடலில் வெற்றிகரமாகப் பரீட்சித்து முடிக்கப்பட்ட இந்திய–ரஷ்ய கூட்டுத் தயாரிப்பான சுப்பசொனிக் ரகத்தைச் சேர்ந்த பிரமஸ் ஏவுகணையை பரீட்சித்த பின்பு அவற்றை சுத்திகரிக்கும் தொழிலாளர்கள்.

# எல்லையில் யுத்த நிறுத்தப் பிரகடனம் பாகிஸ்தான் தன்னிச்சையாக அறிவிப்பு

## ஐ.நா. பொதுச் செயலர் வரவேற்பு

இந்திய-பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது. இதனை இந்தியா வரவேற்றுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் ஸபருலா கான் ஜமாலி கடந்த ஞாயிற்றுக் கிழமை ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார்.

இருநாடுகளுக்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் நோக்குடனேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.இவ் அறிவிப்பு குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தனது வரவேற்பை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளதுடன் எல்லைப் பகுதிகளின் ஊடாக இடம் பெறும் பயங்கரவாதிகளின் ஊடுருவல்கள் தடுக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறான சூழ்நிலையிலேயே யுத்த நிறுத்தத்தை முழுமையாக அமுல் செய்ய முடியுமென இந்திய வெளியுறவுத்துறை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.முதற்கட்டமாக இருநாடுகளுக்குமிடையே தகவல் தொழில்நுட்பத்தினை வளர்க்கும் நோக்குடன் தொழில்நுட்ப மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்த இந்தியா இணங்கியுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் இந்தியாவின் இவ் அறிவிப்பினை ஐ.நா. செயலாளர் கொபி அனான் வரவேற்றுள்ளார்.இதனை நிரந்தரமாக நிலைநிறுத்தி இரு நாடுகளும் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு முறுகல் நிலையைத் தீர்க்க வேண்டுமென அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் எல்லையான ஷமன் என்ற இடத்தில் கைதுசெய்யப்பட்டு அடைக்கப்பட்ட வான் ஒன்றில் நாடு கடத்தப்படும் தலிபான் ஆதரவான சந்தேக நபர்கள்.

# பாதுகாப்புத் துறைக்கான நிதியொதுக்கீடு அதிகரிப்பு!

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் சாதனைக்குரிய பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தில் சனாதிபதி புஷ் கையொப்பமிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இந்நிகழ்வு பென்டகனில் இடம்பெற்றுள்ளது. இம்முறை அமெரிக்காவின் பாதுகாப்புத் துறைக்காக 405.3 பில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் 4.15 வீதம் ஈராக்கில் மற்றும் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படை வீரர்களின் நலனுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அமெரிக்காவின் பாதுகாப்பிற்காக 393 பில்லியன் டொலர் நிதி ஒதுக்கப்பட்டு இதில் 4.1 வீதம் ஏனைய நாடுகளில் நிலை கொண்டுள்ள அமெரிக்க வீரர்களின் நலன்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடற்படைக்கான நவீன ரக ஏவுகணை உருவாக்கத்திற்கு இந்நிதியில் 12 பில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதத்திற்கு எதிராக முஸ்லிம்கள் ஒன்றிணைக!

## சவுதி வேண்டுகை

(றியாட்)

தீவிரவாதத்திற்கு எதிராக சகல முஸ்லிம்களும் ஒன்றிணைய வேண்டுமென சவுதிஅரேபிய அரசரும் முடிக்குரிய இளவரசரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

றம்ழான் நோன்புப் பெருநாளை முன்னிட்டு அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இதனைத் தெரிவித்துள்ளனர். கடந்த சில வாரங்களாக வளை குடாப் பகுதியிலும் துருக்கியிலும் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களில் சுமார் 70 பேர் உயிரிழந்தனர். இவ்வாறான சம்பவங்கள் தொடராமல் இருப்பதற்கு சகல முஸ்லிம்களும் ஒன்றிணைந்து தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சவுதிஅரேபியாவின் முடிக்குரிய இளவரசர் அப்துலலா தெரிவித்துள்ளார்.

இஸ்லாம் மதத்தில் குண்டுகளைப் பொழியுமாறு போதிக்கப்படவில்லையென அவர் மேலும் தனது செய்தியில் கூறியுள்ளார்.

உண்மையான முஸ்லிம் ஊழல்களையும, துன்புறுத்தும் செயல்களையும் மேறகொள்ளமாட்டார் என அவர் கூறியுள்ளார்.

# விடுதலை

மியன்மாரில் இராணுவ ஆட்சியாளர்கள் சனநாயக நடவடிக்கையாளர் சூகியின் தேசிய சனநாயக லீக்கின் 04 சிரேஷ்ட அங்கத்தவர்களை நேற்று விடுதலை செய்துள்ளார்கள்.

சூகியின் தேசிய சனநாயக லீக்கின் 09 அங்கத்தவர்கள் கொண்ட மத்திய நிறைவேற்றுக் குழுவில் இந்த 04 பேரும் அங்கத்தவர்கள் ஆவார்கள்.

## -ஈரான் அணுசக்தி குறித்து-

# அமெரிக்க கொள்கைக்கு மூன்று நாடுகள் இணக்கம்

ஈரான் அணுசக்தித் திட்டம் தொடர்பாகப் பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி ஆகிய 03 நாடுகளும் அமெரிக்காவுடன் ஒரு வழியாக ஓர் உடன்பாட்டிற்கு வந்துள்ளன.

சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் தீர்மானம் தொடர்பாக இந்நாடுகளுக்கிடையே பிரச்சினைகள் இடம்பெற்று வந்தது. யுரேனியத்தை செறிவூட்டும் திட்டத்தை ஈரான் மறைத்து வைத்து ஆயுதம் தயாரிக்கத் தரம் உள்ள புளூட்டோனியத்தை இரகசியமாகத் தயாரித்ததெனச் சர்வதேச அணுசக்தி ஏஜென்சின் அறிக்கை கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.



காஸா நகர அகதிகள் முகாம் ஒன்றில் அழிக்கப்பட்ட வீடொன்றினூடாகச் செல்லும் பலஸ்தீனத் தீவிரவாதிகளின் இரகசியச் சுரங்கத்தைப் பார்வையிடும் இஸ்ரேலியத் துருப்புக்கள்.

# ஜோர்ஜியா சனாதிபதி பதவி விலகல் இடைக்கால நிர்வாக ஆட்சியமைப்பு



பதவி விலகிய சனாதிபதியையும் இடைக்கால நிர்வாகத் தலைவியையும் படத்தில் காண்க.

ஜோர்ஜியா சனாதிபதி செவனாட்சே பதவி விலகியுள்ளார். இதனையடுத்து அங்கு இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஜோர்ஜியாவில் புதிய இடைக்கால நிர்வாகத் தலைவர்கள் தற்போதைய நாட்டு நிலைமை குறித்து கூடி ஆராய்ந்து வருவதாக ராய்ட்டர் செய்தி தெரிவித்துள்ளது.

ஜோர்ஜிய சனாதிபதி நேற்று முன்தினம் பதவி விலகலை அறிவித்தார். இதனைத் தொடர்ந்து ஜோர்ஜியாவில் புதிய இடைக்கால தலைவராக எதிர்க்கட்சித் தலைவி நினோ பர்ட்ஸ் ஹனாட்ஸே பொறுப்பேற்றுள்ளார். சனாதிபதியைப் பதவி விலகுமாறு கோரி எதிர்க்கட்சிகள் கடந்த சில தினங்களாக மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியமை தெரிந்ததே.இவ் எதிர்ப்பின் காரணமாகவே சனாதிபதி பதவி விலகியதாக கூறப்படுகின்றது.

இங்கு புதிய சனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை இடைக்கால நிர்வாகம் தங்களது கடமைகளை மேற்கொள்ளும் எனக் கூறப்படுகிறது.இதேவேளை ஜோர்ஜியாவிற்குத் தேவையான உதவிகளை வழங்க ரஷ்யாவும், அமெரிக்காவும் முன்வந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஆதரவு வீழ்ச்சி

அமெரிக்காவின் டைம் சஞ்சிகையும் மற்றும் சி.என்.என். தொலைக்காட்சி நிலையமும் இணைந்து நடாத்திய கருத்துக் கணிப்பில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்சிற்கு 48 சதவீதமானவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மேலும் 47 சதவீதமான மக்கள் அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, 2001 அக்டோபரில் அமெரிக்கரிடையே புஷ்சுக்கான ஆதரவு 89 சதவீதமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க உலங்குவானூர்தி காபூலில் வீழ்ந்து நொருங்கியது

## -5 படையினர் பலி; 7 பேர் காயம்

(காபூல்)


அமெரிக்க இராணுவ உலங்கு வானூர்தியொன்று ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் வீழ்ந்து நொருங்கியது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

இதன் போது இதில் பயணம் செய்த ஐந்து படையினர் பலியானதுடன் மேலும் 7 படையினர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்க இராணுவ தளமொன்றிற்கு அருகிலேயே உலங்குவானூர்தி விபத்து நேரிட்டுள்ளது.

உலங்குவானூர்தி விபத்துக்கான காரணமெதுவும் அமெரிக்க படைத்தரப்பால் கூறப்படவில்லை.

# தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள்






கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில்...




முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில்...








வடமராட்சி கிழக்கில் நடைபெற்ற மாவீரர் எழுச்சி நாள் சிறப்பு நிகழ்வில்...







# அனைத்துப் பிரதேசங்களிலும் வலய ரீதியாக மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு அனைத்துப் பிரதேசங்களிலும் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன. மாவீரர்களின் பெற்றோர்கள் வலய ரீதியாக அனைத்துப் பிரதேசங்களிலும் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர்.

பரந்தன் பிரதேச மாவீரர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயத்தில் மு.ப.10.30 மணிக்கு பிரதேச அரசியல் துறைப பொறுப்பாளர் செ.சுதா தலைமையில் நடைபெற்றது. சிறப்புரையை தமிழீழ மகளிர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கீதா, கிளி.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர், பாடசாலை முதல்வர் மதுரநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

வடமராட்சிக் கிழக்குப் பாடசாலைகளில் கல்வி கற்ற மாவீர்களின் திருவுருவப்படங்கள் அவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் வைக்கப்பட்டு அவர்களின் பெற்றோர், உறவினர்கள் கௌரவிக்கப்பட்டனர். 20ஆம் திகதி தாளையடி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும், 21ஆம் திகதி மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயத்திலும், ஆழியவளை திவ்வியதாகன் பாடசாலையிலும் கட்டைக்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும், 24ஆம் திகதி செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையிலும், உருத்திரபுரம் மகாவித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளிலும் நிகழ்வு கள் இடம்பெற்றன.

தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வும், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் புங்குடுதீவு-நயினாதீவு பல.நோ.கூ.ச. தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை 10.00மணியளவில் இடம்பெற்றது.

புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் கு.தர்மகுலசிங்கம் பொதுச் சுடரினை ஏற்றி நிகழ்வினைத் தொடக்கி வைத்தார்.

மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்விற்கு வருகை தந்திருந்த முப்பது மாவீரர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நினைவாக நினைவுச் சுடரினை ஏற்றிவைத்தனர். மேற்படி சங்கத் தலைவர் ப.கனகலிங்கம் தலைமையில் நிகழ்வு நடை பெற்றது.

யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன்,தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன் நினைவுரை ஆற்றினார்கள். யாழ்- பல்கலைக்கழக புவியியற் துறைப் பீடாதிபதியும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கா.குகபாலன் சிறப்புரையாற்றினார்.

பூநகரிப் பிரதேசத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு முழங்காவில் ம.வி.இல் இன்று நடைபெறும். இம் மாவீரர் பெற்றோர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம் மாவீரர் பெற்றோர்கள் தியாகதீபம் திலீபன் மருத்துவமனை, நல்லூர் அரசியற்துறைச் செயலகம், கறுக்காய்த்தீவு ம.வி, பூநகரி அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழகம், வாடியடி, ஞானிமடம்,வில்லடி, பள்ளிக்குடா ஆகிய இடங்களில் இன்று காலை 9.00மணிக்கு முன்னர் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மாவீரர் தினத்தினை முன்னிட்டு கிளி. மாவட்டத்தில் பிரதேச ரீதியாக மரக்கன்று நடும் நிகழ்வுகள் இடம்பெற்று வரு கின்றன.

நேற்று மாவீரர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக வளாகத்தில் கரைச்சிப் பிரதேசச் செயலர் பொன்.நித்தியானந்தம் தலைமையில் பி.ப.4.00 மணிக்கு மரக்கன்றுகள் நடும் வைபவம் இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு வளாகத்தில் தென்னம்பிள்ளையினை நாட்டி வைத்து மர நடுகையினை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து கரைச்சிப் பிரதேசச் செயலர், பிரதேசச் செயலக ஊழியர்கள், கிராமசேவை அலுவலர்கள் செயலக வளாகத்தில் மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர். (சோ.14,11,34)

# யாழ்.மீள்கட்டுமானப் பணிகளுக்கு ரூ.6000 மில்.செலவீடு; மக்கள் எவ்வித பலனையும் இதனால் அனுபவிக்கவில்லை!

## -அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக 6000 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டும் அதன்மூலம் எந்தவித பலனையும் மக்கள் அனுபவிக்கவில்லை. இவ்வாறு யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆதங்கத்தை வெளியிட்டுள்ளனர்.**

நேற்று முன்தினம் யாழ்.பஸ்தியான் விடுதியில் நடைபெற்ற மனித நேய அமைப்புக்கள் ஒன்றியத்தின் வருடாந்த மாநாட்டிலேயே இவ்வாறு ஆதங்கம் வெளியிடப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்டத்தைக் கட்டியெழுப்புவதற்கு என கடந்த 18 மாதங்களில் செலவிடப்பட்ட மேற்படி நிதியைப் பயன்படுத்தித் திட்டங்களை முன்னெடுத்தவர்களின் பொறுப்பற்ற தன்மைகளாலும் சுயலாபம் கருதிய செயற்பாடுகளாலும் இந்நிலை ஏற்பட்டதாகக் குற்றம் சாட்டிய அவர்கள்,

பல முக்கியமான அபிவிருத்தி வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டமையையும் பயன்பாடற்ற இடங்களை அபிவிருத்தி செய்ய முற்பட்டமையையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்பு ஒன்றியப் பிரதிநிதி ஜீ.தியாகராசா தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் கொழும்பு மற்றும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் பங்குபற்றி இருந்தனர். (33)

### மனுத் தாக்கல்

அமைச்சர் ராஜித சேனாரட்ண பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள காணி உரிமை பிரேரணை அரசியலமைப்புக்கு முரணானது என தீர்ப்பு வழங்கக்கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமைச்சரின் பிரேரணையின்படி சனாதிபதியினதும் மாகாண சபையினதும் காணி அதிகாரங்கள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்படவுள்ளன. (32)

# வரவு—செலவுத் திட்டத்தில் ஓய்வூதியருக்கு நன்மையில்லை

## -அரச சேவை தொ.ச.சம்மேளனம்

(கொழும்பு)

ஓய்வூதியம் பெறுபவர்கள் சம்பள முரண்பாடுகளை நீக்குவதாக அரசு உறுதியளித்துள்ளது.எனினும் 10சதவீத ஓய்வூதிய அதிகரிப்பு ஒன்றை மாத்திரமே வழங்கியுள்ளது என்று அரச சேவைகள் தொழிற் சங்க சம்மேள தலைவர் டபிள்யூ டி.எச்.பியதாச தெரிவித்துள்ளாா.

அவர் இது பற்றி மேலும் கருத்துக் கூறுகையில், இந்த நாட்டில் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை 3லட்சத்து 65 ஆயிரமாகும். இவர்களில் 70 சதவீத மானவர்கள் 5000 ரூபாவிற்கும் குறைந்த மாதாந்த ஓய்வூதியத்தைப் பெறுகின்றார்கள். இது அதிகரிப்பின் படி பார்த்தால் இவர்களுக்கு 500 ரூபா மாத்திரமே மேலதிகமாகக் கிடைக்கின்றது.

பொது மக்களது எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படவில்லை. செல்வந்தர்கள் நுகரும் பொருட்களுக்கான வற்வரி 20 வீதத்திலிருந்து 15சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது.மாறாக மக்கள் பொதுவாக நுகரும் அத்தியாவசியப் பண்டங்களுக்கான வரி 10 சத வீதததிலிருந்து 15சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.தே.க.வின் யோசனைகளைவிட தனது யோசனைகள் சிறந்தனவாம்

## -இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து சனாதிபதி



1997 ஆம் ஆண்டு இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தான் சமர்ப்பித்த யோசனைகள் ஐ.தே. கட்சி சமர்ப்பித்த யோசனைகளை விடச் சிறந்தவையெனவும், தான் முன்னைய யோசனைகளை முன்னெடுத்துச் செல்ல இருப்பதாக சனாதிபதி கூறியுள்ளார்.

பொ.ஐ.முன்னணி இதன் பின்னர் 3 வருடங்களின் பின்னர் சமர்ப்பித்திருந்த நகலைவிட 1997 ஆம் ஆண்டு சமர்ப்பித்த நகல் அரசியல் யாப்பு மிகச் சிறந்ததென அவர் மேலும் கூறியுள்ளார். அத்துடன் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு உத்தரவாதத்தையும் இது கொண்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்திய சஞ்சிகையொன்றுக்கு சனாதிபதி அண்மையில் அளித்துள்ள பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்:-

ஐ.தே.கட்சியின் அழுத்தம் காரணமாக அவ் யோசனைகளை மேற்கொள்ளவில்லையெனத் தெரிவித்துள்ளார். புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பிரேரணைகள் பற்றிக் கூறுகையில், இவை திருத்தங்கள் இன்றி ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லையெனவும், அப்பிரேரணைகள் தெளிவாகத் தனிநாடு அமைக்கும் வழிக்கு இட்டுச் செல்கின்றதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். தற்போதைய அரசியல் நெருக்கடியைச் சமாளிப்பதற்குத் தான் தெரிவித்த தேசிய நல்லிணக்கக் கூட்டமைப்பு சிறந்ததெனவும், அதில் ஏனைய கட்சிகளும் சேர்ந்து கொள்ளும் என சனாதிபதி தெரிவித்துள்ளார். தான் விடுத்த கோரிக்கையைப் பிரதமமந்திரியினால் ஏன் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளதென்பதைத் தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லையெனவும் கூறியுள்ளார்.

சகல பிரதான அரசியல் கட்சிகளும் வேறுபாடுகளை நீக்கிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வரவேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார். இந்த நோக்கத்தை அடையத் தகுந்த சந்தர்ப்பம் இதுவாகுமெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மாவீரர் தினத்தை முன்னிட்டு வீதியோர மரநடுகைத் திட்டம்

2003 இற்கான வீதியோர மரநடுகைத் திட்டம் 2ஆம் கட்டமாக வரலாற்று முக்கியம் பெற்ற இடமான இயக்கச்சியில் இருந்து ஆனையிறவு வரைக்குமான இடத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. இயக்கச்சிச் சந்தியில் காலை 10 மணிக்கு கிளி.மாவட்ட வனவளப் பாதுகாப்புப் பிரிவுப் பொறுப்பாளர் சு.வைகையன் தலைமையில் அகவணக்கத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது.

இந்நிகழ்வில் இயக்கச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் திருமதி ஆர்.இராசரத்தினம் ஆசிரியர்கள் உட்பட, மாணவர்களும், இயக்கச்சிப் பகுதிக் கிராம சேவகர் க.செல்வராசாவும் கலந்து கொண்டனர். சிறிலங்கா அரசினால் எமது பிரதேசத்தில் திட்டமிட்டுச் செய்யப்பட்ட வளங்களின் அழிவுகளையும், சூழல் பாதிப்படைந்தமை மற்றும் விஞ்ஞான ரீதியில் மரங்களின் செயற்பாடுகள் பற்றியும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் கிளி.மாவட்ட நிர்வாக அலுவலரால் எடுத்துரைக்கப்பட்டு இவ்விடயங்களை மாணவர்களுக்குக் கற்றலின் போது விளக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மரம் நடுகை ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதலாவது மரக்கன்றினை மாவட்டப் பொறுப்பாளர் சு.வைகையனும்,2 ஆவதினை அதிபர் திருமதி ஆர்.இராசரத்தினமும் அடுத்து ஆசிரியர் பி.நடேசலிங்கமும், மாணவர்கள் சார்பில் செல்வன் எஸ்.வீஸ்மனும், கிராமத்தின் சார்பில் கிராமசேவகர் க.செல்வராசாவும், நட்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். இந்த மரநடுகைத் திட்டத்தில் கிளி.மாவட்ட அறிவுக் காலையில் பணிபுரியும் பணியாட்கள் யாவரும் ஆர்வத்துடன் கலந்து திட்டத்தைச் செய்து முடித்தமை யாவரது பாராட்டையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசின் புறக்கணிப்பால் நெசவுக் கைத்தொழில் முடக்கம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலய நடைமுறை மற்றும் அரச புறக்கணிப்புக்களால் யாழ். மாவட்டத்தில் நெசவுக் கைத் தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழில்த்துறை திணைக்களத்தின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் பி.ராகவன் கவலை தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கணிசமான வருவாயை ஈட்டுவதுடன் பலபாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கக் கூடியவிதமாக யாழ். மாவட்டத்தில் 106 நெசவுத் தொழிற்சாலைகள் காணப்பட்ட போதும் அரச புறக்கணிப்புக்களாலும் இராணுவ பாதுகாப்பு வலய நடைமுறையாலும், தற்பொழுது 22 தொழிற்சாலைகள் மட்டுமே இயங்கிவருவதாகவும் இதிலும் வளப்பற்றாக்குறைகளின் காரணமாக 16 மட்டுமே தற்பொழுது நெசவு உற்பத்திப் பொருட்களைத் தயாரிக்கும் பணியில் ஈடுபடுவதுடன் ஏனைய ஆறும் பெயரளவிலேயே இயங்கி வருவதாகவும் சுட்டிக்காட்டினார். (33)

# படையினரால் கைவிடப்பட்ட பகுதியில் பயிர்ச்செய்கைக்கு அனுமதி பெற்றுத் தருக

## விவசாயிகள் அரச அதிபரிடம் வேண்டுகை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மட்டுவில் பகுதியில் படையினரால் கைவிடப்பட்ட பாதுகாப்பு வலயப் பகுதிகளில் பயிர் செய்கைக்குரிய அனுமதியைப் பெற்றுத்தருமாறு அப்பகுதி விவசாயிகள் யாழ் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1995ஆம் ஆண்டில் இருந்து இப்பகுதியை ஆக்கிரமித்து தம் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி வைத்திருந்த பகுதிகளில் சில இடங்களைப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் கைவிட்டிருக்கின்றனர்.

ஆனால் இவ்வாறு கைவிடப்பட்ட நிலப்பரப்புகளில் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றி அங்கு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு படையினர் அனுமதிக்காததால் தாம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியே மக்கள் இக்கோரிக்கையை யாழ்.அரச அதிபர் செ. பத்மநாதனிடம் விடுத்துள்ளனர். (33)

# 1,10,000 ஆசிரியர்களுக்கு சனவரியில் பதவியுயர்வு

எதிர்வரும் சனவரி மாதம் முதல் நாட்டில் உள்ள சுமார் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ஆசிரியர்களுக்குப் பதவியுயர்வுகள் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார். இது தொடர்பான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை ஓய்வூதியம் பெற்றோருக்கும் இந்தப்பதவியுயர்வு வழங்கப்படுமென்றும் அதற்குரிய சம்பள உயர்வும் சனவரி மாதம் முதல் வழங்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். இது தொடர்பான சுற்று நிருபம் எதிர்வரும் வாரத்தில் அனைத்துப் பயனாளிகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (32)

# சமாதான முன்னெடுப்புக் குறித்து சனாதிபதியின் கருத்து ஜே. வி. பி. யின் நம்பிக்கையைத் தகர்த்துள்ளது

## அமைச்சர் ராஜித சேனாரட்ண

தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பில் சனாதிபதி வெளியிட்டுள்ள கருத்துக்கள், சமாதான முன்நகர்வை வலுவூட்டும் என அமைச்சர் ராஜித சேனாரட்ன கூறியுள்ளார். வரவு-செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பின் விவாதத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அமைச்சர், சனாதிபதியின் இந்தக் கருத்துக்கள் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) சனாதிபதி மீதான நம்பிக்கையைத் தகர்த்துள்ளதாகவும் குறிப்பிட்டார். சமாதானம் மற்றும் பொருளாதாரம் என்பன குறித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஒருமித்த வேலைத்திட்டம் இருக்கிறது.எனவே தேசிய ஒத்துழைப்பு அரசாங்கம் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் அவர் எதிர்பார்த்து மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் தமது உரையில், தேசிய அரசாங்கத்தில் நாட்டின் அனைத்து கட்சிகளுக்கும் வாய்ப்பு அளிக்கப்படல்வேண்டும் என கேட்டுக்கொண்டார். சனாதிபதியிடமும், பிரதமரிடமும் நாட்டினைக் கட்டியெழுப்ப எவ்வித முன்னேற்றகரமான திட்டம் எவையும் இல்லை எனவும் அவர் கூறினார். நாடாளுமன்ற உறுப்பினர் (ஐ.தே.க.)வேலாயுதம் உரையாற்றுகையில், சனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் மீண்டும் பிரதமரிடம் ஒப்படைக்கவேண்டும் இல்லையேல், சமாதான முயற்சி முறியுமானால் அதற்கு சனாதிபதியே முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.


# சமாதானத்தை நிலைநாட்ட ரணிலுக்கு இ.தொ.கா. பூரண ஒத்துழைப்பு வழங்கும்

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான்

நாட்டில் சமாதானத்தை மீண்டும் நிலைநாட்டுவதில் பிரதம மந்திரிக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் கூறியுள்ளார்.

தலவாக்கொலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொள்ளும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், அரசாங்கம் பிரச்சினைகளை எதிர் நோக்கிய சகல காலத்திலும் தமது கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியுளளது என்று கூறிய அவர், சமாதான சுபீட்சத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தொழிலாளர் காங்கிரஸ் பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றும் கூறியுள்ளார்.

# கவிபாடி வாழ்த்திடுவோம் தலைவனையே!



## ஆற்றலால் அமைதி ஆக்கி ஆண்டிடக் காண்பான் ஈழம்

முகத்தினிலே சாந்தம் பேசும்
மொழியினிலே மங்கல நாதம்.
அகத்தினிலே விடுதலை ஓர்மம்
ஈழமே சுவாசம், பச்சைப்
புகழ்ச்சியில் மாளா இதயம்
புதுமைகள் எதிலும் ஆர்வம்
தகைமைகள் பலவும் பெற்ற
தலைவனிற் குண்டா நிகர்?

மட்டிலா வீரன், தலைவன்
மாற்றினிற் குன்றாத் தங்கம்
பொட்டிலா நிலவு, தமிழரின்
பொன்முடி தரித்த வேங்கை
எட்டிடா வானம், எதிலும்
ஏற்றமே எய்தும் எண்ணம்
கிட்டிடாப் பேறு, தலைவன்
கிடைத்தனன் எமக்கே சொந்தம்.

ஏவிடும் பணிகள் ஏற்று
எடுபிடி யாகி நேற்று
பாவிகள் தமிழர் பட்ட
பாடுகள் கொஞ்சமோ? எங்கள்
காவியத் தலைவன் வந்தான்
காலத்தை வென்றான். நாங்கள்
ஆவலோடு உலகம் நோக்கும்
அதிசயம் படைப்போர் ஆனோம்.

நிறுத்தமே உடல்கள் அந்த
நிறைக்கது உரிமை வேண்டும்.
பொறுத்தமே வதைகள் எங்கள்
பொறுமைக்கு விடிவு வேண்டும்.
மறுக்கவும் கூடுமோ? தமிழர்
வளைந்திடாப் பனையின் வைரம்.
இருக்கிறான் தலைவன், தமிழர்
இதயங்கள் அவனால் இயங்கும்.

**வேலணையூர் சுரேஸ்**

## தமிழரைக் காத்திடப் பிறந்தவனே



சண்டை யென்றாலும் உனக்குத்தான் வெற்றி
சமாதான மென்றாலும் உனக்குத்தான் வெற்றி
உலக நாடுகள் வியந்திட
அனைத்திலும் வெற்றி குவித்திடும் தலைவனே
கொண்ட கொள்கையில் நின்று நிலைத்திடும்
குரிசிலே எமக்கு நிழல்தரு தருவே
தண்டமிழ் தனைக் காக்க மண்ணிலே
தழைத்து ஓங்கிநீ நீடு வாழ்கவே!

தாயினும் இனிய தலைவனாய் உலகத்
தமிழரைக் காத்திடப் பிறந்தவனே
பாயுமோ புலியெனப் பகைபயந் தோடிடும்
பலமிகு அணியுடன் நிறைந்தவனே
ஓயுமா அலை அன்றி ஓயாது பொங்குமா
உரிய நடவடிக்கை அறிந்தவனே
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் தமிழர்கள்
அனைவருக் காகவும் வாழியவே!

**-மனோன்மணி. நடராசா-**



## எங்கள் இதயம் நிறைந்த தலைவர் மாமாவிற்கு 49ஆவது பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்

உங்களுக்கு நாங்கள் வாழ்த்துக்கூறும் நேரமிது...
படைத்தவன் கைகழுவி விட்டான்
கேட்பாரும் பார்ப்பாரும் நடுத்தெருவில் எம்மைக் கை
விட்டபோதும் கூட
உங்களுக்கு நான் இருக்கின்றேன் - என
வாரி எடுத்து அணைத்து எமை வளர்த்த மாமாவே வாழி!
மாணிக்ககற்கள் பட்டைதீட்டும் போதுதான் ஒளிரும்
ஒளிரும் கற்களுக்குத்தான் பெறுமதிபோல
உங்களின் கையிலே நாங்கள் வந்தபோதுதான்
நாங்கள் பெறுமதியானோம்.
நாங்கள் யார் என தெரியாதபோது
எங்களுக்கு நிரந்தர முகவரியே
உங்களால்த்தான் கிடைத்தது.
கிடைக்கவழிசமைத்துவிட்ட மாமாவே பல்லாண்டு வாழ்க!
முகவரியோடு புது உறவு வந்தது
உறவோடு உலகமே வந்தது
உறவுலகத்தோடு சேர்ந்துவாழ ஒரு வாழ்வு தந்தீர் வாழி!
எத்தனை தடைகள் வந்தபொழுதெல்லாம்
மலையாக நின்று உடைத்து - எமக்கு
வழியெடுத்து கொடுத்தமாமாவே பல்லாண்டு வாழ்க! வாழ்க!
பணிவு தலைகுனிவல்ல, அதுபலவீனமுமல்ல
அது பலம்! மாமாவாழ்க!
உலகம் எதையாவது கூறட்டும்
காலம் ஒரு நாள் பதில் சொல்லும் - அப்போது
உங்கள் காலடி நோக்கி உலகம் விரையும்.
உங்களின் கனவு எங்களின் உழைப்பால் நனவாகும்.
புண்பட்ட உள்ளந்தானே ஒருநாள்
பண்பட்டு உயரும் - நீங்கள் இன்னும் உயர்வீர்கள் வாழ்க
பல்லாண்டு
வாழ்க கோடி நூற்றாண்டு
நூற்றாண்டு கண்டு நூற்றாண்டு காண
எங்கள் மாமாவை வாழ்த்துகிறேன்.

**யோ.யூட்நிமலன்,**
**காந்தரூபன் அறிவுச்சோலை.**



## எங்களின் தலைவா; தமிழ்போல் என்றுமே நீடுற வாழ்க! வாழ்க!

கார் பொழிந்தது;திங்கள்
கார்த்திகை மலர்ந்தது!
ஓர் தலைவன் பிரபா
தோன்றினன் தமிழர் உய்ய!
பேர் நிலைத்தது; அடிமை
போயகன்றது; வீரம்
பார் பரந்தது; புகழ்
பொங்கியுயர்ந்தது!

நீடுறும் தமிழ் போலும்
நிமிர்வுறும் தலைவன் வாழ்க!
பீடுறும் இன்னல் போக்கி
பெருமை தந்தாய் வாழ்க!
கூடிடும் உறவினோடு
குறைவிலா நிறைவுபெற்று
பாடிடும் தமிழீழம் வெல்ல
பாசமே பல்லாண்டு வாழ்க

பொன்னொளிர் கதிரோனே
போயின இருளிடரே
கண்களில் வீரம் பொங்கும்
கனியுளம் காவல் தெய்வம்
எண்களில் ஆண்டு கூடும்;
தமிழோ
என்றுமே இளமை பொய்கும்
எங்களின் தலைவா;
தமிழ்போல
என்றுமே நீடுற வாழ்க
வாழ்க!

**இராஜி சண்முகநாதன்**



# இருளான வாழ்விற்கு ஒளி தந்த மாமாவே

ஈழ மக்களின் இன்னல்கள் போக்கிட
வல்வெட்டித்துறை மண்ணிலே
வந்துதித்த தலைவனே!

தமிழ் மக்கள் வாழ்விற்காய்
தமிழீழம் அமைப்பதற்கு
தனையர்கள் பலர் சேர்த்து
தடம் பதித்தாய் போரினிலே - இன்று
தலை நிமிர்ந்து வாழ்கின்றோம்
தலைவா உன் சேவையினால்.

அரக்கர்களின் அடாவடித்தனத்தால்
அவதியுற்று அலைந்த சிறார்களுக்கு
அன்புக்கரம் கொடுப்பதற்காய்
அமைத்தீர்கள் பல இல்லங்களை - அதில்
ஆனந்தமாய் வாழ்கின்றோம் உங்கள் நாமம்சொல்லி

சிறகிழந்த பறவைகளின்
சீரான வாழ்வை எண்ணி
சிறந்த நல் வழி சமைத்த மாமாவே
சிறார்கள் நாம் உமை
சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம் - எம்
சிந்தை மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

நித்திலம் போற்றுகின்ற - எம்
சத்தியத் தலைவனே
மலர்கின்ற அகவையது
மங்கலமாய் அமையட்டும் - நின்
இனிதான வாழ்வு என்றென்றும்
தொடர்ந்திடவே-எம்
இதயக்கோயிலிலே உமை
எந்நாளும் போற்றி
எல்லோரும் வாழ்த்துகின்றோம்.

குருகுலம் சிறார்கள்,

# தமிழீழ தன்னாட்சிக்குரிய வேந்தனே வாழி

ஈழத்தமிழினத்தின் தீர்வுக்குழைக்கும் எங்கள் தலைவனே வாழி
தமிழீழவரலாற்று காவியநாயகனே வாழி
நாளை மலரும் தமிழீழ தன்னாட்சிக்குரிய வேந்தனே வாழி
நற்றமிழர் தேசியத்தை நாளும் காப்பவனே வாழி
வேளை முழுதும் ஈழத்தமிழரின் விடிவுக்குழைப்பவனே வாழி
வெற்றி பெற்று தேச விடுதலையை பெற்றுத்தரும் பிரபாகரனே வாழி
நீள நினைப் பதற்குரிய தமிழர் நெஞ்சில் வாழ்பவனே வாழி
நிரந்தர உரிமையை ஈழமண்ணுக்கு சேர்க்கின்ற தலைவனே வாழி

-கவிமாமணி மதுரகவி காரை, எம்.பி.அருளானந்தன்.-

# தமிழ் வாழும் காலம் வரை நீடுவாழி

தரணியில் தமிழரின் தாயகம் அமைத்திட
தலைவனாய் வந்துதித்த பெரு மகனே!
தமிழ் இனமதின் அடிமை நிலைதனை நீக்கியே
அமிழ்தான மொழிகாக்க வந்தவனே.

பற்றோடு படைநடத்தும் தளபதியாய் நின்று
வற்றாத வளம் மிகுந்த தாயகத்தை காத்திட்டாய்
வெற்றிகள் பலகண்ட தமிழ் வேங்கையாய் திகழ்ந்து
வீரமறவராம் தமிழரின் தலைவனாய் உயர்ந்தாய்.

போர்க்கலைக்குப் புதுவடிவம் கொடுத்தாய்
போரதனில் புதுப்பரணி படைத்து நின்றாய்
பாரதத்தின் படையகற்றி எம் மண்ணைக்காத்து
பைந்தமிழர் காவலனாய் உயர்ந்து கொண்டாய்.

இன்று அகவை ஒன்று அதிகரித்தாலும்
ஆபத்தில் எமைக்காத்து உளம் மகிழ்ந்தாய்
துன்பத்தை எமக்களித்த எதிரி படை துரத்தி
இன்பத்தை ஊட்டி எம் இமயமாய் நீ உயர்ந்தாய்

தமிழர் துயர்போக்க வந்துதித்த கதிரவனே,
தமிழர் தம் தாயகத்தை இலக்கதாய் கொண்டவனே,
தமிழ் மொழிதன்னை காத்திட உணர்வுடன் உழைப்பவனே,
தமிழ் வாழும் காலம்வரை வாழ்கவே வையகத்தில்.

கீழ்கரவை சி. சிவநேசன்



# என்றும் வாழிய தலைவனே

மேலும் ஒரு அகவையா? உனக்கா?
நான் காண்பது கனவா நிசமா?
நம்பவே முடியவில்லை என்னாலே
நாடுகள் யாவும் இதனையே கூறும்
பார் பம்பரம் போலச் சுழல்கிறாய் எதிலும்
சம்பளம் வாங்கா ஊழியனாகச்
சகல தமிழர்க்கும் சேவை புரிகிறாய்

இருபது வயது இளைஞனைப் போல
எழிலும் துடிப்புமாய்க் காட்சி தருகிறாய்
செருவிலே பகைவர் சிதறியோடிடச்
செய்யும் வண்ணம் போருத்தி வகுக்கிறாய்
ஒரு வழியாலும் உனை வெல்லல் அரிதென
அரசுக்குணர்த்திப் பேசவைக்கிறாய்
பெருநிதியென உனைப் போற்று மெம்நெஞ்சப்
பேழையுள் நிறைந்து தினம் நடமிடுகிறாய்

என்றும் அகவையில் நீ
இருபது வயது இளைஞனே
இன்றுபோல் வய தெல்லையின்றி நீ
என்றும் வாழிய தலைவனே!

-சு.லோகநாதன்.-

# வையகம் வாழும் வரை வாழ்த்திடுவோம்


எம் சுந்தரத் திரு நாடு-
சொர்க்க பூமியாக-
உன்-
சொந்தங்கள் தொடர்கின்றன.

சந்தத் தமிழ் இலக்கணமே-
சத்துவத்
தமிழ் இலக்கியமே-
உன்-
உடன் பிறப்புகள்-
நேசித்து யாசிக்கின்றோம்
தொடரட்டும்,
உனது பயணம்
தொடர்ந்து வருவோம்
தோள் கொடுப்போம்
துணை நிற்போம்

வாழ்க பல்லாண்டு - எம் தலைவா
வாழ்க பல்லாண்டு - எம் தலைவா!

சொலமன் சூ.சிறில்

# தேசத்தலைவனுக்கு நே




தேசமெல்லாம் பேசும் -எங்கள்
தேசியத்தின் தலைவன் - தன்
காலமெல்லாம் தந்து - எம்
வாழ்வில் வாசம் வீசவைக்கும்
தலைவா! வாழிய! வாழிய !!

## 49 வது பிறந்தநாளில் எமது வாழ்த்துக்கள்!

- தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கம் (கைதடி)
- தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம் (கொடிகாமம்)
- சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்
- வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம் (மருதங்கேணி)
- பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம்
- புலோலி ப.நோ.கூ. சங்கம்
- கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்
- உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்
- வலி.கிழக்கு வட பகுதி ப.நோ.கூ. சங்கம்
- வலி.கிழக்கு தென் பகுதி ப.நோ.கூ. சங்கம்
- நல்லூர் ப.நோ.கூ. சங்கம்
- யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம்
- சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்
- சங்கானை ப.நோ.கூ. சங்கம்
- மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம்
- பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம்
- அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்
- தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம்
- காரைநகர் ப.நோ.கூ. சங்கம்
- வேலணை ப.நோ.கூ. சங்கம்
- புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ. சங்கம்
- ஊர்காவற்துறை ப.நோ.கூ. சங்கம்
- நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம்
- தீவுப்பகுதி (அனலைதீவு) ப.நோ.கூ. சங்கம்
- யாழ் மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
- யாழ் மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்
- யாழ் மாவட்ட வெதுப்பக உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
- யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்
- யாழ் மாவட்ட பாரஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
- யாழ் மாவட்ட வர்த்தக தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
- வடமாகாண கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
- வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்சமா
- யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

# நேசமுடன் வாழ்த்துக்கள்!




(சி-8808)



# பிறந்தநாள் வாழ்த்து

எம்மினத்தின் விடிவிற்காய்
விழு தெறிந்து நின்றவனே
விடிவு வெகு தூரமில்லை-என
விடி வெள்ளியாய் உதித்தவனே
வாழிய நீ நீடூழி
நிமிர்க தமிழினம்

அதிபர்,ஆசிரியர்கள், பணியாளர்கள்,
மாணவர்கள்,பாடசாலை
அபிவிருத்திச் சபையினர்.
மு/உடையார்கட்டு ம. வி

(3355)




# வாழ்க! வளர்க!

தமிழீழத் தாயின் தலைப்புதல்வன் எங்கள்
தமிழீழம் எங்கும் தவழ்ந்திட்ட அண்ணன்
தமிழர் உள்ளங்களில் தன்மானம் வளர்த்து
தமிழீழம் எங்கும் தனிக் கொடியாம் எங்கள்
தமிழீழத் தேசியப் புலிக்கொடி பறந்திடும்
தன்மானம் வளர்த்திடும் தனிப்பெரும் தலைவன்
எங்கள் அண்ணன் பிரபாகரன் பிறந்தநாள்
என்றும் தமிழரின் மனங்களில் பொன்நாள்
எங்கள் அண்ணன் பல்லாண்டு வாழ
இனிதே வாழ்த்தும் வெண்புறா நிறுவனம்.

**வெண்புறா செயற்கை உறுப்பு**
**தொழில்நுட்ப நிறுவனம்**

யாழ்சாலை, கிளிநொச்சி.

(சீ-8920)



# 49வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

தமிழர் தலை நிமிர்ந்து வாழ வழிசமைத்த
தன்னிகர் இல்லாத் தலைவா நீவாழி!
தனை ஈன்ற தமிழர் தாயகமும் வாழி!
தன்புகழ் நீடூழி வாழி வாழி!

## திருமகள் பல்பொறி வாணிபம்

113, யாழ்சாலை, கிளிநொச்சி.

(சீ-8730)

## முற்றி வந்த பகை முடித்த நெஞ்சவனே நீ வாழ்க!



49 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

கல்லுருக மழை பொழியும் கார்த்திகை மாதமதில்
கடலலைகள் முத்தமிடும் வல் வெட்டித் துறைஊரில்
கவலைகளை களையறக்க அவதரித்த பெருந்தலைவா
கடவுளை போல் கண்ட உம்மை வாழ்த்துறோம் வாழ்த்துகிறோம்.

வெற்றியிலே மங்காத தோல்வியிலே கலங்காத
நெற்றியிலே வந்த பகை நேர் கொள்ள அஞ்சாத
பற்றி உனை இருப்பவரை பழிதாண்ட வைக்காத
முற்றி வந்த பகை முடித்த நெஞ்சவனே நீ வாழ்க.

தரணியெல்லாம் தமிழினத்தை தலை நிமிர வைத்தவனே
பரணி என்று இன்னுமொரு பா பாடவைத்தவனே
மரணித்த மா வீரர் புகழ் காத்தவனே
அரண் நீ எமக்கு இங்கு வாழ்த்துகிறோம் வாழ்கவென்று.

கலையோடு பண்பாடும் கலைந்திடாமல் போய்விட வே
அலையோடு கடாரத்தின் கதை தொடர வைத்திட வே
சிலையோடு நான் உறைந்த தெய்வங்கள்அருளாலே
மலைபோல வந்தவனே மறக்காது வாழ்த்துகிறோம்.

ஆண்ட எங்கள் பரம்பரையை ஆள வைக்கத் துடிக்கின்றாய்
மாண்ட எங்கள் வீரர்களை ஆண்டு தோறும் துதிக்கின்றாய்
பாண்டவர் போல் பக்கதுணை பலமாக நீ கொண்டாய்
ஆண்டவனே இறங்கி வந்து வாழ்த்துரைப்பார் "நீ வெல்வாய்"

**வணிகர் கழகமும்,**
**காரைநகர் பிரதேச மக்களும்**

(சீ-8813)

# வாழ்க! பல்லாண்டு வாழ்த்துகிறோம் நூறாண்டு



யாழ்.வல்வெட்டித்துறையதில்
கார் கால மின்னலாய்
கார்த்திகை மாதத்தில் அவதரித்த
எங்கள் கரிகாலனே!
தமிழ் வாழ திட்டம் தீட்டி
தமிழீழத்தை வென்று வரும் தமிழீழனே
எல்லையற்ற வரைக்கும்
ஆழமற்ற கடலுக்கும்
ஒப்பான தலைவர் போல்
ஈழத்தை ஆளவந்த ஈழ வேந்தனே
ஆலமரம் போல் நீயிருக்க அதில்
பல ஆயிரம் பறவைகளாய் நாம் இளைப்பாற
வழி வகுக்கும் வேந்தனே வாழ்க!
வீரத்தாய் பெற் றெடுத்து வீரமுடன்
தவழ விட்ட வீர மைந்தா வாழ்க!
உலகே அதிசயிக்குதடா ! உன் சேவை கண்டு
மென் மேலும் உயர வேண்டும் உயர்த்த வேண்டுமென
வாழ்த்துகிறோம் நாமும்........
வாழ்க பல்லாண்டு
வாழ்த்துகிறோம் நூறாண்டு

எஸ். ஜெயரூபி
புத்தளம்.

(சீ-8901)

*எமது தேசியத் தலைவருக்கு*
*49 வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்!*



